முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1017

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.07.2022, செவ்வாய்கிழமை

1. ஓங்கார தவசியே அரங்கா
ஓங்கார சக்தியே தேசிகா
ஓங்காரன் என் அவதாரமே குருராஜா
ஓதிடுவேன் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி தன்னை
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 28 நாள், 12.07.2022 செவ்வாய்கிழமை)
உரைத்திடுவேன் அரங்கனுக்கு சக்திகூட
ஞானவான்கள் இணைந்து அரங்கன் வழி
ஞானயுகம் படைக்க அற்புதம் நடத்தி வர
3. வருகின்ற காலங்கள் அரங்கனுக்கு
வல்லமையூட்டும் காலமாக இருக்கவே
பெருமைபட அரங்கன் புகழ் பாடி
பேருலகமெங்கும் அரங்கனை குருவாய் ஏற்று
4. ஏற்றுமே உலகமக்கள் தொடர்ந்துவர
இந்த அற்புதம் சடுதி உலகில் நடந்தேறும்
ஆறுமுகன் என் தலைமைகொண்ட
ஞான ஆட்சிக்காலமாக மாற்றம்
5. மாற்றம் உலகம் சடுதி கண்டு
மக்களெல்லாம் ஞானவான்களாக சிறந்து
ஆக்கமுடன் ஞானிகள் ஆட்சி
ஆறுமுகன் என் தலைமைகொண்ட ஞான ஆட்சி உருவாகும்
6. ஆகவே அரங்கன் ஞானவேலிக்குள்
அகிலத்தார் வந்திணைந்து
முருகா அரங்கா எனும் ஜெபதபங்கள்
முழுமைபட செய்து தொடர்ந்து வர
7. வருகவே உலகில் பெருமாற்றம்
வல்லமைபட அரங்கனால் நடக்கும்
நடக்கின்ற சக்திக்காக நாளும்நாளும்
நாட்டிடுவேன் அரங்கனுள் என்பலம்
8. தடையின்றி மகா சூட்சுமமாக இருந்துவர
தரணியோர் அரங்கனை ஏற்று வர
ஆறுமுகன் யான் ஐயமற அற்புதம் நிகழ்த்துவேன்
அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–